# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 173/மா/2017

ஆணை எண். 285/2017

நாள் : 18/12/2017

திரு J. வேலாயுதம்,
கவுந்தம்பாடி,
ஈரோடு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
சேலம் மாநகராட்சி, சேலம். – எதிர் மனுதாரர்

ஈரோடு மாவட்டம், கவுந்தம்பாடி, ஒடத்துறை அஞ்சல், எண்.28, போஸ் தெருவைச் சேர்ந்த திரு J. வேலாயுதம் அவர்களின் 26.08.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.08.2017 அன்று பெறப்பட்டு 173/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. சேலம் மாநகராட்சி சூரமங்கலம் வார்டு உதவி ஆணையரது அறிக்கை மற்றும் 14.12.2017 அன்று விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

ஈரோடு மாவட்டம், கவுந்தம்பாடி, ஒடத்துறை அஞ்சல், எண்.28, போஸ் தெருவைச் சேர்ந்த திரு J. வேலாயுதம் என்பவர், சேலம் அரிசிப்பாளையம், R.D.பால் தெரு, கதவு எண்.178 வீட்டிற்கு (வரி விதிப்பு எண்.1034822) அதன் உடமைதாரரும், மனுதாரரின் பெரிய தாயாருமான திருமதி லட்சுமி அம்மாள் என்பவரிடமிருந்து வீட்டின் பரப்பளவிற்கு ஏற்றாற்போல் சொத்து வரி வசூலிக்காமல் மாநகராட்சிக்கு நிதி இழப்பை ஏற்படுத்தி உள்ளனர் என்றும், எனவே உரிய விசாரணை மேற்கொண்டு 3 தார்சு வீடுகளுக்கும் முறையாக வரி விதிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள 178 எண்ணுள்ள வீடு (வரி விதிப்பு எண்.1034822) மாநகராட்சி சொத்துவரி பதிவேட்டின்படி திரு இளங்கோவன் பெயரில் உள்ளது என்றும், எனினும் அவரது வீட்டிற்கு அரையாண்டு சொத்து வரி ரூ.1717/– வசூலிக்கப்பட்டு வருகிறது என சூரமங்கல வார்டு உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். எனினும், மனுதாரரின் பெரிய தாயார் திருமதி லட்சுமி அம்மாள் அவர்களின் வீடு ஆர்.டி.பால்தெருவில், 178–எ எண்ணிட்ட வீடு என்றும் அந்த வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு எண்.1034821 என்றும் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் அவரது பெரிய தாயாரின் வீட்டின் எண்ணை தவறாகக் குறிப்பிட்டு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். எனினும், 178–எ எண்ணுள்ள திருமதி லட்சுமி அம்மாள் அவர்களின் வீடுகளுக்கு சேலம் நகராட்சியாக இருந்தபோதே சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டதென்றும், இவ்வீட்டிற்கு இரண்டு மூன்று முறை சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டு 2008–2009 ஆம் ஆண்டு சொத்துவரி சீராய்வின்போது ரூ.221/–ஆக நிர்ணயம் செய்யப்பட்டது என்றும் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில், 12.07.2017 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலர் அவர்கள் வரிவிதிப்பு மற்றும் வரிவிதிப்பு அல்லாத இனங்கள் குறித்து ஆய்வு செய்வதற்கான கூட்டம் ஒன்றை நடத்தி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அலுவலர்களுடன் கலந்தாலோசித்துள்ளார். அக்கூட்டத்தில் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் சொத்துவரி விதிக்கப்படாதது மற்றும் குறைவான சொத்துவரி விதித்துள்ள கட்டடங்களை கண்டறிந்து சொத்துவரி புதியதாகவும், குறைவாக உள்ளதை மறு நிர்ணயம் செய்து திருத்தி அமைக்க உரிய வழிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள அரசு முதன்மைச் செயலர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அவ்வறிவுரையினை ஏற்று குறைவாக வரி விதிப்பு செய்யப்பட்ட திருமதி லட்சுமி அம்மாள் அவர்களின் 178–எ எண்ணிட்ட வீட்டிற்கு திருத்திய வரி நிர்ணயம் செய்யப்பட்டு 01.04.2011 முதல் அரையாண்டு ஒன்றிற்கு ரூ.2,432/– நிர்ணயம் செய்து சிறப்பு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. வீட்டின் உரிமையாளர் திருமதி லட்சுமி அம்மாள் காலமாகி விட்டதால் அவரது உறவினரான திரு இளங்கோவன் பொறுப்பில் அவ்வீடுகள் உள்ளன. எனவே, சொத்துவரி உயர்த்தியதற்கான அறிவிப்பினை அவரிடம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விவரங்களை 14.12.2017 அன்று நடைபெற்ற விசாரணையின்போது சூரமங்கலம் வார்டு உதவி ஆணையர் இதனை உறுதி செய்தார்.

4. முறையீட்டு மனுதாரர் தற்பொழுது ஈரோடு மாவட்டம் கவுந்தம்பாடியில் வசித்து வருகிறார். இவர் ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர். 14.12.2017–இல் நடைபெற்ற விசாரணைக்கு வருமாறு மனுதாரர் அழைக்கப்பட்டார். 68 அகவையினைக் கடந்த மனுதாரர் தனது உடல்நிலையைக் காரணம் காட்டி தன்னால் விசாரணைக்கு வர இயலாது எனத் தெரிவித்து விட்டார். மனுதாரர் சுட்டிக் காட்டிய தனது பெரிய தாயாரின் வீட்டிற்கு சொத்துவரி சீராய்வு செய்து அரையாண்டிற்கான வரி ரூ.221/– லிருந்து 2,432/– ஆக முன்தேதியிட்டு உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையில் முடித்துக்கொள்ளலாம் என முடிவு செய்து, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு J. வேலாயுதம்,
28, போஸ் தெரு,
ஒடக்கரை அஞ்சல், கவுந்தம்பாடி,
ஈரோடு மாவட்டம் – 638 455.

2. உதவி ஆணையர்,
சூரமங்கலம் வார்டு அலுவலகம்,
சேலம் மாநகராட்சி, சேலம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்